2017 ஜூலை 14] **[திரு. எஸ்.பி. வேலுமணி]**

அடிப்படையிலும் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அங்கிருக்கக்கூடிய சுத்திகரிப்பு நிலையங்களை நிருவகிப்பது பற்றியும், ஆகாயத் தாமரையை அகற்றித் தர வேண்டுமென்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். அதே கோரிக்கையை மாண்புமிகு வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் சகோதரி திருமதி கஸ்தூரி வாசு அவர்களும் வைத்துள்ளார்கள். இதற்குமுன்னர், சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், 2006 ஆம் ஆண்டில் அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். அப்பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று அந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். அந்தக் கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் உள் ஒதுக்கீடு குறித்த அரசாணையை உயர் நீதிமன்றம் தடை செய்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, என்ன சொல்ல வேண்டும் என்பதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

முற்பகல் 11–40

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையில், உயர் நீதிமன்றமும் தற்போது ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 85 சதவிகித இடங்கள்* State Board; *15 சதவிகித இடங்கள்* C.B.S.E *மாணாக்கர்களுக்கும் என உத்தரவிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். அதற்கு உயர் நீதிமன்றம் தற்போது* stay *வழங்கியிருக்கிறது. இன்று தர வரிசைப் பட்டியல் வெளியிடுவதாக அறிவித்திருந்தீர்கள். 17 ஆம்*

தேதி கலந்தாய்வு நடைபெறும் என்றும் அறிவித்திருந்தீர்கள். உண்மையிலேயே இந்த வருடம் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்கள் சேர்க்கை நடக்குமா, நடக்காதா என்பதை தயவுசெய்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.*

***திரு. சே. கருணாஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளுக்கான மாணவர்கள் சேர்க்கையிலே தமிழக அரசு கிராமப்புற மாணவர்களுடைய நலனையும், மருத்துவக் கல்வி அவர்களுக்குத் தேவை என்ற உள்ளுணர்வையும் புரிந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் 85 சதவிகிதம் மற்றும் 15 சதவிகித உள் இட ஒதுக்கீட்டை இந்த அவையிலே அரசாணையாக வெளியிட்டார்கள். அதை அனைத்துத் தரப்பு மக்களும் ஏற்றுக்கொண்டார்கள். இந்த நிலையில் திடீரென்று உயர் நீதிமன்றத்திலே இப்படி ஒரு தடை உத்தரவு வந்திருப்பது மக்களிடத்திலே மிகப் பெரிய அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மருத்துவச் சேர்க்கை கலந்தாய்வு நடைபெறுமா, இது மாணவர்களுடைய எதிர்காலத்திற்கான நல்வழியைக் காட்டுமா என்பது குறித்து பதிலளிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கான சேர்க்கையில் அரசினுடைய மாநில பாடப் பிரிவில் பயின்ற மாணவர்களுக்கு 85 விழுக்காடு என்ற நம்முடைய உள் இட ஒதுக்கீட்டை இன்று உயர் நீதிமன்றம் தடை செய்திருக்கிறது. இந்த நிலை குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

2017 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அனைத்து ஆயத்தப் பணிகளையும் மிகச் சிறப்பாகச் செய்து, தயார் நிலையில் இருக்கிறது. இருந்தாலும், ஒவ்வொரு காலகட்டத்திலும் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில் அவர்களுடைய அறிவுறுத்தலை நாம் கடைப்பிடிக்க வேண்டியது என்பது மிக மிக அவசியம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்த ஒன்று. ஏற்கெனவே இந்த அரசாணை வெளியிட்டதற்குப் பின்னாலே அனைத்துத் தரப்பு மக்களும் இதை ஏற்றுக்கொண்டார்கள். அது ஓரளவுக்கு நமக்கு மன நிறைவை அளிக்கிறது என்று மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சொன்னார்கள். ஆனால், அதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் இதற்குத் தடை கோரி 15–க்கும் மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டன. உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் நம்முடைய* Senior Counsel, *மூத்த வழக்குரைஞர்களை உச்ச நீதிமன்றத்தில் அமர்த்தி, தமிழக அரசினுடைய இந்தக் கொள்கை முடிவை, இன்றைய நிலைப்பாட்டை அழகாக அவர்களிடத்தில் நம்முடைய வாதத்தில் எடுத்து வைத்ததன் காரணத்தினாலே உச்ச நீதிமன்றத்தில் அதற்கு* stay *வழங்கவில்லை. தடையாணை வழங்காமல், சென்னை உயர் நீதிமன்றத்தில் சென்று இந்த வழக்கை* dispose *செய்துகொள்ளுங்கள் என்று உச்ச நீதிமன்றம்* dispose *செய்தது. உயர் நீதிமன்றத்தில் இவர்கள் வழக்கைத் தொடுத்தார்கள். உடனடியாக நம்முடைய* Advocate General, *தலைமை வழக்கறிஞர் அவர்கள் வாதங்களை எல்லாம் எடுத்துவைத்துள்ளார்கள். ஒரு நாள் முழுவதும் வாதம் நடைபெற்றது. அரசு அதை மிகுந்த உன்னிப்பாகக் கவனித்து வந்து கொண்டிருந்தது.* We are in close follow–up. *அதைத் தாண்டி தாங்கள் இப்பொழுது சொன்ன இந்தத் தகவல் இங்கே எங்களுக்கு வந்திருக்கின்றது. உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றோம். சட்ட நிபுணர்களோடு கலந்தாலோசித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பிலே இதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே இதே 85 சதவிகிதம், 15 சதவிகிதம் என்ற வகையிலே நம்முடைய மாநிலத்தினுடைய உரிமையை நிலைநாட்ட வேண்டுமென்ற முழு*

அக்கறையோடு தீர்ப்பு நகல் வந்தவுடனேயே சட்ட நிபுணர்களோடு கலந்தாலோசித்து, உயர் நீதிமன்றத்தின் Bench–ல் மேல்முறையீடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(உ) நீலகிரி மாவட்டம், கூடலூர், பந்தலூர் வட்டங்கள், மின் இணைப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, சபையை நடத்தவிடாமல் என்னை இப்படி தொல்லை செய்கிறீர்களே! என்ன விஷயம், சொல்லுங்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர், பந்தலூர் வட்டங்களில் கிட்டத்தட்ட 50, 60 ஆண்டுகளாக வீடுகள் கட்டி குடியிருப்பவர்கள் 10 ஆயிரம் பேர் மின் இணைப்பு கேட்டு காத்திருக்கிறார்கள். அங்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்தபொழுது* indemnity bond–*ம், வீட்டு வரி கட்டிய ரசீதும் இருந்தால் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கலாம் என்று சொன்னார்கள். தற்போது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அது மலைப் பகுதி. அந்த மலைப் பகுதிக்கு சிறப்பு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடலூரிலே மின்னிணைப்பு கேட்கின்ற பகுதி, ஜென்ம பகுதியாக இருக்கின்ற காரணத்தால், உச்ச நீதிமன்றம் ஒரு குழுவை அமைத்திருக்கின்றது. அங்கே இருப்பவர்களுக்கு எந்தவிதமான வளர்ச்சித் திட்டங்களை செய்து தர வேண்டுமென்றாலும், மின்சார இணைப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னாலும், பல சான்றிதழ்களை வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அதிலே முதலாவதாக நிலவுடைமைச் சான்று வாங்க வேண்டும், பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து தடையில்லாச் சான்று வாங்க வேண்டும், பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து முழுமையான சான்றிதழ்*